

ரத்தக்குழாய் வீக்கம் குறித்த சர்வதேச மாநாடு மியாட் மருத்துவமனையில் நேற்று தொடங்கியது. மாநாட்டுக்கு வந்த மருத்துவ நிபுணர்களை மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ் கவுரவித்தபோது எடுத்தபடம். அருகில் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், டாக்டர் வி.வி.பாஷி ஆகியோர் உள்ளனர்.

# ரத்தக்குழாய் வீக்கத்துக்கு நவீன அறுவை சிகிச்சை

## சென்னை மியாட் மருத்துவமனை மாநாட்டில் ஆலோசனை

சென்னை, ஜன.10- ரத்தக்குழாயில் ஏற்படும் வீக்கத்துக்கு நவீன முறையில் சிகிச்சை அளிப்பது குறித்த 2 நாள் சர்வதேச மாநாடு சென்னை மியாட் மருத்துவமனையில் நேற்று தொடங்கியது.

### ரத்தக்குழாயில் வீக்கம்

மனிதர்களுக்கு உடல் முழுவதும் ரத்தத்தை கொண்டு செல்வது ரத்தக்குழாய்கள் ஆகும். அதில் தமனி என்கிற பெரிய ரத்தக்குழாய் இருதயத்தில் இருந்து ரத்தத்தை உடலின் பல பாகங்களுக்கும் கொண்டு செல்கிறது.

ரத்தக்குழாயானது அதன் அளவை காட்டிலும் 1½ மடங்கு அதிகரிக்கும்போது அதை வீக்கம் அல்லது அன்யூரிஸம் என்று அழைக்கிறோம். அதுவும் இந்த வீக்கம் பெரிய ரத்தக்குழாயான தமனியில் ஏற்பட்டு, வெடித்தால் அது மிக ஆபத்தானது. வெடித்த சில நிமிடங்களில் உயிர் போய் விடும்.

இந்தியாவில் 6 லட்சம் முதல் 7 லட்சம் பேர் பல வகைப்பட்ட ரத்தக்குழாய் வீக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு பெரும்பாலும் அறுவை சிகிச்சை அல்லது சாவித்துவார செயல்முறையில் சிகிச்சை அளிக்கலாம். ஆனால் 7 லட்சம்பேர் பாதிக்கப்பட்டிருந்தாலும் விழிப்புணர்வு இல்லாமல் பலர் உள்ளனர்.

தங்களுக்கு நோய் இருப்பதே தெரியாமல் பலர் உயிரிழக்கிறார்கள்.

இந்தநோய்க்கு திறந்தநிலை அறுவை சிகிச்சை மற்றும் ஹைபிரிட் அறுவை சிகிச்சை ஆகிய 2 வகையான சிகிச்சைகள் உள்ளன.

### மாநாடு

எளிதான முறையில் இந்த நோயை குணப்படுத்த எப்படி அறுவை சிகிச்சை செய்யலாம், அறுவை சிகிச்சையில் எந்த நவீன தொழில்நுட்பங்களை புகுத்தலாம் என்பது குறித்த 2 நாள் சர்வதேச மாநாடு சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் நேற்று தொடங்கியது.

மாநாட்டை மியாட் மருத்

லிகா மோகன்தாஸ் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். மியாட் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் முன்னிலை வகித்தார்.

### டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ்

மாநாட்டில் மியாட் மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ் பேசியதாவது:-

மியாட் மருத்துவமனை இன்று இந்தியாவில் சிறந்த இருதய அறுவை சிகிச்சை மையங்களில் ஒன்றாக விளங்குகிறது. அதற்கு உரிய காரணங்களில் ஒருவராக டாக்டர் வி.வி.பாஷி உள்ளார். மருத்துவத்துறையில் புதிய புதிய தொழில்நுட்பங்கள் இன்று உலகில் வந்து கொண்டே இருக்கின்றன.

### 32 வெளிநாடுகளில் இருந்து நோயாளிகள் வருகை

புதிய தொழில்நுட்பங்களை மியாட் மருத்துவமனையில் அறிமுகப்படுத்தி வருகிறோம். அதனால் 32 நாடுகளில் இருந்து நோயாளிகள் மியாட் மருத்துவமனைக்கு வருகிறார்கள். மியாட் மருத்துவமனையில் சர்வதேச அயோர்டிக் அன்யூரிஸம் குறித்த மாநாடு தொடங்கி உள்ளது. இந்த மாநாட்டில் இத்தாலி, பெல்ஜியம், நியூசிலாந்து, பிரேசில், அமெரிக்கா உள்பட பல வெளிநாடுகளில் இருந்தும் மருத்துவ நிபுணர்கள் வந்து இருக்கிறார்கள். அவர்கள் ரத்தக்குழாய் வீக்கத்திற்கு நவீன அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்றவர்கள். மாநாட்டில் 250-க்கும் மேற்பட்ட முதுநிலை மருத்துவர்கள் பேச உள்ளனர். இதயவியல் நிபுணர்கள், இருதய அறுவை சிகிச்சை நிபுணர்கள், இடையீட்டு கதிரியக்கவியல் நிபுணர்களும் வந்துள்ளனர்.

### அறுவை சிகிச்சைக்கு எளிமைப்படுத்த முடியும்

நாடு முழுவதும் உள்ள நோயாளிகளுக்கு அவர்கள் மேற்கொள்ள உள்ள சிக்கலான ரத்தக்குழாய் வீக்கத்திற்கு அறுவை சிகிச்சைகளை எளிமைப்படுத்த உதவும்.

இவ்வாறு டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ் பேசினார்.

தொடக்கத்தில் மியாட் ஆஸ்பத்திரியின் இருதய அறுவை சிகிச்சை மைய தலைவர் டாக்டர் வி.வி.பாஷி வரவேற்றார்.